

எழும்பூர் மார்ஷல்ஸ் சாலையில் ஓங்கி உயர்ந்து நிற்கிறது இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் பிளானிங் அண்ட் மேனேஜ்மென்ட் (சுருக்கமாக ஐஐபிஎம்) கல்லூரி வளாகம். கேம்பஸ் செக்யூரிட்டியில் ஆரம்பித்து புரஃபஸர், ஸ்டூடன்ட்ஸ் என **எல்லோரும் பாரபட்சமின்றி அஜித் ரசிகர்களாம்!**

''பாடம் சம்பந்தமா அப்பப்ப ஏதாவது படம் போட்டுக் காட்ட காலேஜ்ல புரஜக்டர் இருக்கு. அதுலகூட அஜித் படம்தான் பார்ப்போம். கோட், சூட் போட்டுக்கிட்டு காலேஜுக்கு வர்றது, பைக் ஓட்டறதுனு எங்களுக்கு வாழ்க்கைல **எல்லா விஷயங்கள்லயும் 'தல'தான் இன்ஸ்பிரேஷன்''**





அரவிந்தன், ராமசாமி, கார்த்திக், ஆனந்த், கதிர், மஹாராஜன்

என அபிப்ராயத்துக்கு அஜித் புராணம் பாடுகிறார்கள்.

'ராவணனுக்கு பத்து தல
முருகனுக்கு ஆறு தல
பிரம்மாவுக்கு மூணு தல
தமிழ்நாட்டுக்கு ஒரே தல
அது நம்ம அஜித்தல'

- பஞ்ச் டயலாக்கிலும் அஜித்!

**'அட பாவிங்களா... அஜித்தை விட்டா வேற பேச்சே இல்லையா?** ஸைலன்ஸ் ப்ளீஸ்' என்றதும், ''விஜய் பத்தி பேச றேன்'' என கை தூக்கியவர் கதிர்.

''வில்லுக்கு அடுத்து விஜய் நடிக்கிற படம் தெரியுமா? 'சொம்பு' - இதோட பஞ்ச் லைனா 'பண்ணாதே வம்பு', வால்ட் டிஸ்னி புரடக்ஷன். படத்தோட கதைகூட கசிஞ்சிருச்சு... சொல்றேன் கேளுங்க.

படத்துல விஜய்யோட அப்பாவா நடிக்கிறவர் ஸில்வஸ்டர் ஸ்டாலோன். ரொம்ப கஷ்டப்பட்ற குடும்பம். ரேஷன் கடைல சாமான் வாங்கப்போற விஜய்யோட அப்பாகிட்ட அதிகமா காசு கேட்டு, கடைக்காரன் ஏமாத்தறான். அந்த அதிர்ச்சில அவருக்கு ஹார்ட் அட்டாக் வந்து பக்கத்துல இருந்த சொம்பைப் பிடிச்சுகிட்டே செத்துடறாரு. ஆக்ரோஷமான விஜய், அதே சொம்பைக் கைல தூக்கிகிட்டு, **ஒவ்வொரு ரேஷன் கடைக்கா போய், ஏமாத்தறவங்களை சாகடிக்கிறாரு...''** என கதையை முழுக்கியவரின் வாயைப் பொத்தியது கரன், அரவிந்தன், ராமசாமி, கார்த்திக், ஆனந்த், மஹாராஜன் அண்ட் கோ.

''ராகுலகிருஷ்ண பக்தவச்சலம் இருஷ்ணமாச்சாரியா ஸ்ரீகாந்த் கெட்டியார் இருப்பத்தார் **வரான்... வரான்...''** - **தனக்குத் தானே 'பராக்'** சொல்லிக்கொண்டு வந்து அமர்ந்தவர் ராகுல்.

''மிஸ்டர் பீன் மாதிரி இவன் மிஸ்டர் பிரேயின். அறிவு அப்பப்ப பொங்கி வழியும். உதாரணத்துக்கு ஒண்ணு... பெட்ரோல் போட பங்க் போயிருக்கான். அங்க செல்போன் யூஸ் பண்ணக்கூடாதுனு போட்டிருக்கு. அதைப் பார்த்துட்டு மொத வேலையா, அங்கயே நின்னுகிட்டு அத்தனை ஃப்ரெண்ட்ஸுக்கும் செல்போன்ல அந்தத் தகவலைச் சொல்லியிருக்கான்!'' - ஜனனியிடம் பல்பு வாங்கினார் ராகுல்.

''இவன்தான் டாக்டர் கதிர் குன்வால். படத்துக்குப் போனா தூங்கிடுவான். ஆனா, படத்துல யாருக்காவது உடம்பு சரியில்லாத சீன் வந்தா சட்டுனு எழுந்திருப்பான். அவங்களுக்கு என்ன நோய்ங்கிறதை கரெக்டா சொல்லிடுவான். கொலஸ்ட்ரால்லேர்ந்து எய்ட்ஸ் வரைக்கும் எல்லாத்தையும் கிடெக்ட் பண்ணிக்கிட்டே இல்லாம கண்டுபிடிக்கிறதுல இவன் கிங்கு'' என கதிர் பற்றி பிட்டுப் கொடுத்தவர்கள் உமா, அகிலா, சிந்து கூட்டணி.

''**எங்க காலேஜ்ல ஃபேட் கிளப்னு ஒண்ணு இருக்கு.** அதாவது ரொம்ப ஒத்துமையா திரியற ரெண்டு பேருக்குள்ள எப்படியாச்சும் சண்டையைக் கிளப்பி விட்டுடுவோம். ரெண்டு பேரும் அடிச்சுக்கிறப்ப, அவங்களுக்குள்ள பஞ்சாயத்து பண்ணி, சமரசம் செய்து வைப்போம். இதுக்கு ரெஜிஸ்ட்ரேஷன் ஃபீஸ் 225 ரூபா. அந்தப் பணம் அப்படியே அரசாங்கத்துக்குப் போயிடும்...'' - ராமசாமி சொல்லி முடிப்பதற்குள் மேட்டரை உடைத்தவர் ஆகாஷ்.

''**அரசாங்கத்துக்குள்ளா டாஸ்மாக் தானடா? அதுக்காடா இவ்ளோ பில்டப்?**'' - குட்டு உடைந்ததில் குனிந்த அவரது தலை, கடைசி வரை நிமிரவே இல்லை.

''இவன்தான் கரன். இவனுக்கு கல்யாணம் நிச்சயமாயிருக்கு. ஆனா, இவனுக்கு மட்டுமில்லே... ஒட்டுமொத்த காலேஜுக்கும் இந்த வருஷம் தலை தீபாவளி தெரியுமா?'' - புதிர் போட்டார் அரவிந்தன்.

''இவனுக்கு நிஜமான தலை தீபாவளி. அஜித் படம் ரிலீஸாகறதால எங்களுக்கெல்லாம் 'தல' தீபாவளி!''

என்ன செய்ய? எல்லாம் நம்ம 'தல'யெழுத்து!

- ஆர்.வைதேகி
படங்கள்: ஆர்.சந்திரசேகர்

### தத்துபித்துவம்ஸ்

✓ ஆயிரந்தான் இருந்தாலும், ஆயிரத்தி ஒண்ணுதான் பெரிசு.
✓ என்னதான் சூரியன் பூமியை சுத்திச் சுத்தி வந்தாலும், சூரியனுக்கு பூமி எண்ணிக்கூடும் பிக்கப் ஆகாது.
✓ இடப்பக்கத்து, நாளாவில் வேலை வாங்கத் துடிப்பவர்கள் சங்கம்.
✓ இனிமே, நன்னாரி என்று சொல்லும்போது உதடுகள் ஒட்டாது.
பி, பிரஜீஷ் என்று சொல்லும்போது தான் உதடுகள்கூட ஒட்டும்.
- சொன்னவர் ஸ்வாமி சரக்கானந்தா

### டிக்ஷ்னரி

- பங்கு - பங்காளி
- மாப்பி - மாப்பிள்ளை
- குருவம்மா, செல்லத்தாயி - நாட்டுப்புற லுக்கில் இருக்கும் பொண்ணுங்க
- குழந்தை - கொஞ்சிக் கொஞ்சிப் பேசற பொண்ணுங்க

